# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No. 259/2023

Deposition of witness – PW18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காமராஜ் | Caste | : | |
| S/o.W/o. | : | | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 28.07.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

எதிரி ஆஜர்.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை :**

நான் தற்பொழுது காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்பொழுது ஓய்வு பெற்று சேலத்தில் நிரந்தரமாக தங்கி வருகிறேன் இதற்கு முன்பு நான் தாரமங்கலம் காவல் நிலையத்தில் 2023 ஆம் ஆண்டு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த பொழுது 8.1.2023 ஆம் தேதி அன்று இரவு 22.00 மணிக்கு பெரிய சோரகை கிராமம் மாட்டுக்காரன் வளவை சேர்ந்த மணி மனைவி சரஸ்வதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துப்பூர்வமான புகாரை பெற்று தாரமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 23/2023 சட்ட பிரிவுகள் 302 மற்றும் 201 ipc ஆகிய பிரிவின்

கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை வாதியின் புகார் உடன் இணைத்து நீதித்துறை நடுவர், ஓமலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்து இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு துரித தபாலில் அனுப்பி வைத்து புலன் விசாரணைக்காக ஒரு நகலை தாரமங்கலம் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன் இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.8.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இரவு 10.00 மணிக்கு தான் புகார்தாரர் சரஸ்வதி அவர்கள் என்னிடம் வந்து புகார் தெரிவித்தார் என்றால் சரிதான். 5 மணி நேரம் காலதாமதத்திற்கான காரணம் எதுவும் புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது சம்பந்தமாக நான் விசாரணை எதுவும் செய்தேனா என்றால் நான் விசாரணை எதுவும் மேற்கொள்ளவில்லை. புகார் ஆனது காலதாமதத்துடன் தரப்பட்டுள்ளது என்ற விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நீதித்துறை நடுவரிடம் முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு அனுப்பப்பட்டது என்றால் இரவு 1.00 மணிக்கு மேல் அனுப்பப்பட்டது

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.07.28 07:57:49 +0530

முதன்மை அமர்வு நீதிபதி, சேலம்.